செய்தி வெளியீடு நாள்: 28.12.2025

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 69.56 கோடி மதிப்பீட்டில் சென்னை, பிராட்வே, டேவிட்சன் சாலையில், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள பிராட்வே 33/11 கி.வோ. துணைமின் நிலையத்தை திறந்து வைத்து, மின்விநியோகத்தை தொடங்கி வைத்தும், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் கட்டப்பட்டுள்ள 15 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட கீழ்நிலை மற்றும் மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி அமைக்கும் பணியை ஆய்வு செய்தும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பிராட்வே, பிரகாசம் சாலையின் இருபுறமும் அமைக்கப்பட்ட 128 எண்ணிக்கையிலான புதிய மின் விளக்குகள் திறந்து வைத்தும் மற்றும் சி.எம்.டி.ஏ சாரிபில் பிராட்வே, பிரகாசம் சாலையில் "முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்" கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்** நேற்று (28.12.25) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை, பிராட்வே, டேவிட்சன் சாலையில், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பில் 18.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள **பிராட்வே 33/11 கி.வோ. துணைமின் நிலையத்தை** திறந்து வைத்து, மின்விநியோகத்தை தொடங்கி வைத்தும், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட **கீழ்நிலை மற்றும் மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டி** அமைக்கும் பணியை ஆய்வு செய்தும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.1.26 கோடி செலவில் பிராட்வே, பிரகாசம் சாலையின் இருபுறமும் அமைக்கப்பட்ட 128 **எண்ணிக்கையிலான புதிய மின் விளக்குகள்** திறந்து வைத்தும் மற்றும் சி.எம்.டி.ஏ சாரிபில் 23.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிராட்வே, பிரகாசம் சாலையில் "**முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்**" கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** சென்னை முழுவதும் சீரான மற்றும் விரிவான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் வட சென்னை பகுதிகளில் பல்வேறு முக்கியமான திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்காக வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் 1034.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 திட்டப்பணிகள் மேற்கொள்ளவதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் 1000.39 கோடி ரூபாயும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் 33.85 கோடி ரூபாயும் நிதி பங்கீடு செய்து வழங்கியதன் அடிப்படையில், பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை பிராட்வே, டேவிட்சன் சாலையில், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சார்பில் 18.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு நிறுவப்பட்டுள்ள பிராட்வே 33/11 கி.வோ. துணைமின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (28.12.2025) திறந்து வைத்து, மின்விநியோகத்தை தொடங்கி வைத்தார்.

இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்ட புதிய 33/11 கி.வோ. துணைமின் நிலையம், மின்னூட்டம் பெற்று 5 புதிய 11 கி.வோ மின் பாதைகள் வாயிலாக 2X8 எம்.வி.ஏ திறனுடைய மின்மாற்றிகள் மூலமாக மின்சாரம் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலமாக வடசென்னை பகுதியி குறைந்த மின் அழுத்த குறைபாட்டினை நிவர்த்தி செய்து, தடையற்ற மற்றும் மின்னழுத்த ஏற்ற இறக்கமின்றி சீரான மின் விநியோகம் வழங்க உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய துணை மின்நிலையம் மூலம் பிராட்வே, மண்ணடி, சவுக்கார்பேட்டை, கொத்தவால் சாவடி, என்.எஸ்.சி போஸ் ரோடு, முத்தையால் பேட்டை மற்றும் ஏழு கிணறு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வணிக மற்றும் வீடுகளுக்கான மின்நுகர்வோர்கள் சுமார் பதினைந்தாயிரத்திற்க்கும் மேற்பட்டோர் சீரான மற்றும் தடையற்ற மின்சாரம் பெற்று பயன் அடைவார்கள்.

மேலும், ஏற்கனவே உள்ள கிழக்கு ஜார்ஜ் டவுன், பூக்கடை 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள் மற்றும் உயர்நீதிமன்ற 110 கி.வோ துணை மின் நிலையத்திலும் உள்ள சுமார் 10 எம்.வி.ஏ மின் பளு இன்று முதல் குறைக்கப்பட்டு, இத்துணை மின் நிலையத்தின் வாயிலாக மின் விநியோகம் செய்யப்படும்.

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்** சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் பிராட்வே, டேவிட்சன் சாலையில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தலா 15 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட கீழ்நிலை மற்றும் மேல்நிலை குடிநீர் தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகளின் முன்னேற்றத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள்** சென்னை, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிராட்வே, பிரகாசம் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு எண் 55, 56, மற்றும் 57 ஆகிய

Verified @ RealEstate™

வார்டுகளுக்குட்பட்ட பிரகாசம் சாலையின் இருபுறமும் ரூபாய் 1.26 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 128 எண்ணிக்கையிலான மின்விளக்குகளின் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்** பிராட்வே, பிரகாசம் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 23.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "**முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்**" கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. சா.சி.சிவசங்கர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் சாமுவேல், கூடுதல் தலைமைச் செயலாளர் /தமிழ்நாடு மின் பகிர்மான கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., எரிசக்தித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொ) திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் பகிர்மான கழக இயக்குநர் (பகிர்மானம்) திரு. அ.செல்வகுமார், துணை ஆணையர்கள் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (வடக்கு) திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.எல்.தாஹா நவீன், திருமதி வெ.பரிமளம், திரு.ராஜேஷ் ஜெயின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate TM